**திண்டிவனம் நகராட்சி**

**அவசர கூட்டம்**

## முன்னிலை:– நிர்மலா ரவிசந்திரன், நகர மன்ற தலைவர்.

**30.06.2022–ம் வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற சாதாரண கூட்டப் பொருள் விபரம்.**

| வ. எண் | பொருள் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | செஞ்சி ரோடு பேருந்து நிலையம் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆவின் பாலகத்திற்கு மின் இணைப்பு பெற திருமதி. ராஜேஸ்வரி க/பெ. ஜெயபிரகாஷ் , எண் 28 அப்புக்குட்டி தெரு, முருங்கப்பாக்கம் , திண்டிவனம் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No.11480/ 2022 மூலம் வழக்கினை நகரட்சிக்கு எதிராக தொடர்ந்துள்ளார்.<br>மேற்கண்ட வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் D.ரவிச்சந்தர் அவர்களால் நகராட்சி சார்பாக ஆஜராகி வக்காலத்து மற்றும் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.15000/–ஐ (பதிநைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 241/2021/அ1) | தீர்மானம் எண்:29.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 2 | இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் விவரங்களை உடனடியாக தட்டச்சு செய்து அனுப்ப காலதாமதம் எற்படாமல் இருக்க நிர்வாக நலன் கருதி காலியாக உள்ள தட்டச்சர் பணியிடத்தில் தற்காலிகமாக ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடமிருந்து கணினி தொழில்நுட்ப பணியாளர் ஒருவரை மாவட்ட ஆட்சியரின் ஷெட்யூல் ரேட்டின்படி நகர மன்ற தீர்மான எண் . 244 நாள். 23.07.2021ல் ஒப்புதல் பெற்று ஆகஸ்ட் 2021 முதல் ஜீலை 2022 வரை ஓராண்டுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேற்படி காலம் முடிவடைய உள்ளதால் மேலும் ஓராண்டிற்கு மேற்படி பணியினை மாவட்ட ஆட்சியர் ஷெட்யூர் ரேட் தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரு. 813/– அடிப்படையில் | தீர்மானம் எண்:30.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்ய மேற்கண்ட நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் ஒரு பணியாளரை மேலும் ஓராண்டிற்கு காலநீட்டிப்பு செய்து பணியமர்த்திக் கொள்ளவும் தோரய செலவினம் ரு.3.00 (மூன்று இலட்சத்துக்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 3 | இந் நகராட்சிக்கு தேவையான எழுதுப் பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், பேரேடுகள், நோட்டீசுகளை 2022-2023ம் ஆண்டிற்கு அரசு அனுமதி பெற்ற கோ-ஆப்- ரேட்டிவ் சொசைட்டி நிறுவனத்தாரிடம் செலவினம் மேற்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரு.3,00,000/- (ருபாய் மூன்று இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1180/2019/சி2) | தீர்மானம் எண்:31.<br>அலுவலக குறிப்பு |
| 4 | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் கூட்டத்தொடரில் தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வியாபாரம் செய்ய ஏற்ற சூழல் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA1.நாள்.16.06.2022 தேதி கடிதத்தில் தெரிவித்துள்ளபடி சாலையோர வியாபாரிகளின் பாதுகாப்பு விதிகள் 2015 ன் படி, நடப்பாண்டில் சாலையோர வியாபாரிகளை கண்டறிய புதியதாக கணக்கெடுப்பு செய்யப்பட்டு, Biometric & QR Bar Code டன் கூடிய அடையாள அட்டை வழங்கவும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட ஏதுவாக விரிவான திட்ட(DPR) அறிக்கை தயார் செய்யவும், Online மூலம் ஒப்பந்த புள்ளி கோரவும், விரைவாக இப்பணியை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திண்டிவனம் நகர எல்லைக்குட்பட்ட சாலையோர வியாபாரிகள் 2309 நபர்களுக்கான தோராய செலவினம் ரூ.20,00,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்திடவும் செலவினத்தை | தீர்மானம் எண்:32.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம். திட்டத்திற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், NULM திட்டத்திற்கான நிதி பெறபட்டவுடன் அச்செலவின தொகையை பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3752/2014/எப்1</td><td></td></tr>
<tr><td>5</td><td>இந்நகராட்சியில் குடிநீர் நிதி –2022–23 ன் கீழ்,பின்வரும் பணிக்கு 16.06.2022 அன்று வரை விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி களை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>விலைப்புள்ளி தொகை(ரூ )</th></tr>
<tr><td>1</td><td rowspan="3">குடிநீர் டேங்கர் லாரி வாகனத்தின் TN 32 Q 7432 ஆண்டு பராமரிப்பு (FC) பழுது பார்க்கும் பணி</td><td>Mailam Agro Service Centre GST Road Kottripattu Tindivanam</td><td>165500</td></tr>
<tr><td>2</td><td>விழுப்புரம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவுமையம் லிட் .,F. V 24</td><td>174900</td></tr>
<tr><td>3</td><td>Jameus Auto Tikering Works MRS Theatre Road (GST Road ) Tindivanam.</td><td>171300</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :–<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு பெறப்பட்டதில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள Mailam Agro Service Centre GST Road Kottripattu Tindivanam ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி யை ஏற்று வேலை உத்திரவு வழங்க மற்றும் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்:33.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>6</td><td>இந்நகராட்சி வார்டு எண் 22–ல் எம்.ஜி.ஆர் தெருவில் உள்ள இறைச்சி கூடத்திற்கு இறைச்சிகளை சந்தைப்படுத்த விற்பனை கூடத்தை பராமரிப்பு பணி செய்து வழங்குமாறு நகரமன்ற துணைத்தலைவர் கோரியுள்ளார்.<br>எனவே மேற்படி இறைச்சி கூடத்தில் உள்ள இறைச்சி விற்பனை கட்டிடத்தை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் தண்ணிர் வசதி செய்யவும் ஆகும் தோராய செலவினம் ரூ.8.50/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்:34.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண் : 3034/இ1/2022) | |
| 7 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8879/2022/தி-2, நாள்.26.04.2022 கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டதின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அறிவுசார் மையம் அமைக்க ரூ.200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு மதிப்பீடு தயார் செய்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சிக்குட்பட்ட மருத்துவமனை சாலையில் உள்ள நகர சர்வே எண்.18, பழைய சர்வே எண்.161/2, ல் வேணுகோபால் பூங்காவில் அறிவுசார் மையம் அமைக்க ரூ.200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்ப நகர மன்ற தீர்மான எண் : 14 நாள் : 27/05/2022 -ல் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துறை, அரசாணை (எம்.எஸ்) எண் : 88 நாள்.17-06-2022-ல் இந்நகராட்சிக்கு அறிவுசார் மையம் அமைக்க ரூ.186.68/- இலட்சத்திற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2137/2022/இ1) | தீர்மானம் எண்:35.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 8 | வட்டார போக்குவரத்து அலுவலர் திண்டிவனம் அவர்கள் 18/04/2022 திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காந்தி பேருந்து நிலையத்திற்கான பதிவை புதுப்பித்தல் சம்மந்தமாக நேரடி கள ஆய்வு நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளருடன் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பேருந்து நிலையத்திற்கு சான்றை புதுப்பிக்க பேருந்து நிறுத்தங்கள் (Bus Bays) மற்றும் குடிநீர் வசதி செய்ய தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டும், சின்டெக்ஸ தொட்டி வைத்து குடீநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.<br>மேற்படி ஆய்வில் பேருந்து நிறுத்தங்கள் (Bus Bays) அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகிலேய பயணிகள் நிற்பதற்கு தேவையான காத்திருப்பு கூடம் (Waiting Shed) அமைத்து பயணிகள் காத்திருந்து பேருந்தில் பயணிக்க வசதியாக இருக்கும் என வட்டார போக்குவரத்து அலுவலர், திண்டிவனம் அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே இந்திரா காந்தி பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்தங்கள் (Bus Bays) அருகில் 5mX20m அளவிற்கு GI. Sheet கொண்டு காத்திருப்பு கூடம் (Waiting shed) அமைக்கவும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.8.75 இலட்சத்திற்கு ( ரூபாய் எட்டு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியை பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1904/2022/இ1) | தீர்மானம் எண்:36.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>9</td>
<td>
இந்நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி – 2021–2022ம் நிதியாண்டின் கீழ் திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்த பின்வரும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந. க. எண் : ஆ6/2249/2021 நாள் : 09.05.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>திண்டிவனம், அரசு ஆதிதிராவிடர் நல விடுதி, பள்ளி மாணவர் பயன்பாட்டிற்காக கட்டில் வழங்குதல்.</td><td>5.00</td></tr>
<tr><td>2</td><td>திண்டிவனம், அரசு ஆதிதிராவிடர் நல விடுதி, பள்ளி மாணவியர் பயன்பாட்டிற்காக கட்டில் வழங்குதல்.</td><td>5.00</td></tr>
<tr><td>3</td><td>திண்டிவனம், கோவிந்தசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆதிதிராவிடர் நல விடுதி, மாணவியர் பயன்பாட்டிற்காக கட்டில் வழங்குதல்.</td><td>9.90</td></tr>
<tr><td>4</td><td>திண்டிவனம் நகராட்சி 12வது வார்டு தீர்த்தகுளம் பகுதியில் அங்கன் வாடி கட்டிடம் அமைத்தல்.</td><td>10.00</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற நிர்வாக அனுமதியை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :–
<ol>
<li>மன்றம் பதிவு செய்யலாம்,</li>
<li>மேற்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வரப்பெற்ற நிர்வாக அனுமதியின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியை பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td>தீர்மானம் எண்:37.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>10</td>
<td>இந்நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் – 2021–2022ம் நிதியாண்டின் கீழ் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்த பின்வரும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந. க. எண் : ஆ6/2099/2021 நாள் : 18.05.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில் )</th></tr>
<tr><td>1</td><td>முருங்கப்பாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு இரும்பிலான இருக்கை மற்றும் மேஜை வழங்குதல் (10 செட்)</td><td>1.35</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற நிர்வாக அனுமதியை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :–<br>
1. மன்றம் பதிவு செய்யலாம்,<br>
2. மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வரப்பெற்ற நிர்வாக அனுமதியின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண்:38.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>11</td>
<td>திண்டிவனம் நகராட்சியில் 2022–2023ம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவில் வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை மாநில மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் தினசரி நாளிதழ்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் விளம்பரம் செய்யவும் மற்றும் அரசின் சாதனைகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், முக்கிய அமைச்சர்கள் வரவேற்பு விளம்பரம், திட்டங்கள் துவக்குதல் தொடர்பான விளம்பரங்கள் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :–<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி விளம்பரங்களுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 1904/2022/இ1)</td>
<td>தீர்மானம் எண்:39.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 12 | காட்டராம்பக்கம் நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 300mm ms பிரதான நீரேற்று குழாய் கிளியனூர் சோதனைச் சாவடி அருகில் திண்டிவனம் பாண்டி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே சேதமடைந்து உள்ளதால் திண்டிவனம் நகருக்கு குறைந்த அளவு குடிநீர் மட்டுமே பெறப்பட்டு வருகிறது. இதனால் திண்டிவனம் நகரில் சீரான குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே சேதமடைந்துள்ள 300mm ms குழாயினை சுமார் 115m நீளத்திற்கு DI குழாயாக மாற்றி அமைக்கவும். அதற்கான தோராய செலவினம் ரூ.14.00/- (ரூபாய் பதினான்கு இலட்சத்திற்கு) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 31.05.2022 வரை கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **தீ குளோபல் கிரீன் இன்டஸ்டீஸ், மதுராந்தகம்** நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் முடிக்கப்பட்டு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மானம் எண்:40.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 13 | இந்நகராட்சி வார்டு எண்-29ல் பழமை வாய்ந்த ஈஸ்வரன் கோவிலில் அமைந்துள்ளதால் அக்கோவிலில் திருவிழா தொடர்ந்து 10 நாட்களில் நடைபெற உள்ள அக்கோவிலுக்கு வரும் பொதுமக்களுக்கும் , கோவில் பயன்பாட்டிற்கும், குடிநீர் தேவைப்படுவதால் ஈஸ்வரன் கோயில் அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ஏற்கனவே நகரமன்றத்தின் ஒபபுதல் பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர செலவினத்தொகை ரூ.2.30/-(ரூபாய் ,இரண்டு இலட்சத்து முப்பபதயிரம் மட்டும் ) செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:41.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 14 | இந்நகராட்சியில் வார்டுஎண்–29–ல் இந்திராகாந்தி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் போர் பழுதாகி உள்ளதால், தண்ணீர் இல்லாமல் பேருந்தில் பயணம் செய்யும் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமான சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளது, புதிய போர்வெல் அமைத்து தர ஏற்கனவே நகரமன்றத்தின் ஒப்புதல் பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே புதியதாக போர்வெல் அமைத்து தர செலவினத்தொகை ரூ.1.50 (ரூபாய் ,ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:42.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15 | இந்நகராட்சியில் வார்டு–02 வது வார்டில் அய்யாந்தோப்பு ,அய்யனார்ப்பன் கோவில் அருகே ஆழ்துளை கிணறு அமைத்து புதியதாக சின்டேக்ஸ் (SIN TAX) அமைத்து தர ஏற்கனவே நகரமன்றத்தின் ஒபபுதல் பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து புதியதாக சின்டேக்ஸ் அமைத்து தர கூடுதல் செலவினத்தொகை ரூ.2.30 (ரூபாய் ,இரண்டு இலட்சத்து முப்பாதாயிரம் )செலவிற்காக குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி வெலவினத்தை அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:43.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 16 | இந்நகராட்சியில் வார்டுஎண்–29ல் சுந்தரம் 2வது குறுக்கு தெரு மற்றும் அண்ணா நகர் ,பாரதிதாசன் பேட்டை ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு பூதேரி குடிநீர் பைப் லைன் புதியதாக அமைத்து தர ஏற்கனவே நகரமன்றத்தின் ஓபபுதல் பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே புதியதாக குடிநீர் பைப் லைன் அமைத்து தர செலவினத்தொகை ரூ.4.00/–(ரூபாய் ,நான்கு இலட்சம் மட்டும் )செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:44.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17 | இந்நகராட்சிக்கு சொந்தமான காவேரிப்பாக்ககம் ஆரம்பப்பள்ளியில் உள்ள பழைய சிமெண்ட் தள கட்டிடம் சிதலமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள மேலும் இரண்டு வாரங்களுக்கு முன்பு சிமெண்ட் தளத்தின் உட்புறமும் இடிந்து விழுந்துள்ளது. இதனை நேராய்வு செய்ததில் தற்போது பள்ளிகள் திறக்கப்பட உள்ளதாலும், பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன்கருதியும் உடனடியாக மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:45.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>18</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட காவேரிப்பாக்ககம் சின்ன வீரராகவன் தெருவில் சந்திப்பில் உள்ள மினி பவர் பம்பு தண்ணீர் டேங்க் சிதலமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது மேலும் அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி உடனடியாக மேற்படி மினி பவர் பம்பு தண்ணீர் டேங்க் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும் ,மேற்படி இடத்தில் புதியதாக மினி பவர் பம்பு தண்ணீர் டேங்க் அமைக்கவும் தோராய செலவினம் ரூ2.30/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண்:46.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>19</td>
<td>இந்நகராட்சியில் வருவாய் நிதி 2021-2022ன் கீழ், பின்வரும் பணிக்கு 22.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">திண்டிவனம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமையவுள்ள திண்டிவனம் ஏரி பகுதியை தூர்வாரி ஆழப்படுத்தி கரையை பலப்படுத்துதல் பணி</td><td rowspan="2">48.00/-</td><td>ஆர்.வெங்கடேசன்</td><td>-0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>கே.சுப்பராயலு</td><td>15.43% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :-<br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.வெங்கடேசன், திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் .<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3997/2021/இ2)</td>
<td>தீர்மானம் எண்:47.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 20 | இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளதால், அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் மற்றும் ரீ–Filling டோனர்கள் பயன்பாடு தேவை ஏற்படுகிறது. ஒவ்வொரு பிரிவுகளிலும் கணினியில் தட்டச்சு செய்வதை பிரிண்ட் எடுப்பதற்கும், சொத்துவரி, தொழில்வரி, கடைவாடகை மற்றும் குடிநீர்வரி அறிவிப்பு நோட்டீஸ்கள் பிரிண்ட் எடுப்பதற்கும், பொதுசுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு , வருவாய் பிரிவு மற்றும் பொதுப்பிரிவுகளில் உள்ள அனைத்து பிரிவு கணினி பிரிண்டர்களுக்கு தேவையான **28ஏ, 337, 12ஏ** டோனர்கள் வாங்கி பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.<br>எனவே, **2022–2023ம்** ஆண்டிற்கு தேவையான **28ஏ, 337, 12ஏ** டோனர்கள் மற்றும் ரீ–Filling டோனர்களை வாங்க ஆகும் தோராய செலவினம் **ரூ.2.00** இலட்சத்திற்கும் மற்றும் **2021–2022ம்** ஆண்டில் சப்ளை செய்த திரு.ஜி.தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடமிருந்து பழைய விலை விகிதத்தில் வாங்கவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2297/2019/பி2) | **தீர்மானம் எண்:48.**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 21 | இந்நகராட்சியில் **2022–2023ம்** ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் **31.03.2022ல்** முடிக்கப்பட்டு, உள்ளாட்சிநிதி தணிக்கைத் துறை, விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு **19.03.2022** முதல் தணிக்கை நடைபெற்று வருகிறது.<br>மேற்கண்ட விவரப்படியான **2022–2023ம்** ஆண்டிற்கான ஆண்டுக்கணக்குகள் ரொக்கப்புத்தகத்துடன் இணக்கம் செய்தும், கணினியில் General Ledger, Trail Balance, Balance Sheet மற்றும் DCB-யுடன் ஒப்பிட்டு சரிபார்த்து **2022–23** மற்றும் **2023–24ம்** ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளை, திரு.ஜி.தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் அவர்கள் மூலம் தயார் செய்து கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் **ரூ.80,000/–ஐ** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3066/2022/பி2)** | **தீர்மானம் எண்:49.**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>22</td>
<td>
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு வருகை தர இருப்பதால் நகரிலுள்ள அனைத்து முக்கியச் சாலைகள், தெருக்களில் உள்ள மண்மேடுகளை அகற்றி சீர்செய்வதற்கு ஒரு மண்அள்ளும் இயந்திரத்தினை, நாள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்ய 31.03.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>விலைப்புள்ளி அளித்துள்ள தொகை மணிநேர வாடகை</th></tr>
<tr><td>1</td><td rowspan="3">நகரிலுள்ள அனைத்து முக்கியச் சாலைகள், தெருக்களில் மண்மேடுகளை அகற்றி சீர்செய்வதற்கு ஒரு மண்தள்ளும் இயந்திரத்தினை, நாள் வாடகை அடிப்படையில் ஒரு டிப்பர் லாரியினை சப்ளை செய்ய</td><td>ஆர்.வெங்கடேசன்,<br>எண்.5பி/24எ.<br>துலுக்காணம் தெரு,<br>சஞ்சீவிராயன்<br>பேட்டை, திண்டிவனம்.</td><td>ரூ.800/-</td></tr>
<tr><td>2</td><td>செல்வம் எர்த் ஓர்க்ஸ்,<br>எண்.20, மாரியம்மன்<br>கோவில் தெரு,<br>கூட்டேரிப்பட்டு.</td><td>ரூ.950/-</td></tr>
<tr><td>3</td><td>பி.பாலாஜி,<br>எர்த் மூவர்ஸ்,<br>எண்.32/எ,<br>ரத்தனசபாபதி தெரு,<br>திண்டிவனம்.</td><td>ரூ.900/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் ஆர்.வெங்கடேசன்,எண்.5பி/24எ.துலுக்காணம் தெரு,சஞ்சீவிராயன் பேட்டை, திண்டிவனம். நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி அவற்றினை ஏற்று நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 8-2/2022/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:50.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 23 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கும், பயன்படுத்தப்பட்டு வரும் TN16 F3454 எண்ணுள்ள டாடா ஏஸ் வாகனத்தில் தேய்ந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்களும் மற்றும் நான்கு டியூப்களும் புதியதாக வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரபணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2125/எச்1/2022)** | தீர்மானம் எண்:51.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 24 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கும், பயன்படுத்தப்பட்டு வரும் TN16 F3466 எண்ணுள்ள டாடா ஏஸ் வாகனத்தில் தேய்ந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்களும் மற்றும் நான்கு டியூப்களும் புதியதாக வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரபணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2124/எச்1/2022)** | தீர்மானம் எண்:52.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 25 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கும், பயன்படுத்தப்பட்டு வரும் TN16 F3414 எண்ணுள்ள டாடா ஏஸ் வாகனத்தில் தேய்ந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்களும் மற்றும் நான்கு டியூப்களும் புதியதாக வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரபணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2127/எச்1/2022)** | தீர்மானம் எண்:53.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 26 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கும், பயன்படுத்தப்பட்டு வரும் TN16 F3474 எண்ணுள்ள டாடா ஏஸ் வாகனத்தில் தேய்ந்துள்ளதால் புதியதாக நான்கு டயர்களும் மற்றும் நான்கு டியூப்களும் புதியதாக வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரபணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2126/எச்1/2022) | தீர்மானம் எண்:54.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27 | இந்நகராட்சி வருவாய்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும சொத்துவரி பொது சீராய்வு-2022 பணி நடைபெறுவதற்கு ஆட்சேபணை தெரிவித்து திரு.க.அழகர்ராஜா த/பெ கருப்புசாமி, எண். 52, மயிலம் ரோடு, இந்திரா நகர், திண்டிவனம் என்பவர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (WP.11434/2022) தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்து வழங்கினை ஏற்று நடத்திட ஆகும் வழக்கறிஞர் கட்டண செலவினம் ரூபாய் 25,000/- ஐ (இருபது ஐந்து ஆயிரம்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2318/எ3/2022) | தீர்மானம் எண்:55.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 28 | இந்நகராட்சியின் 2021-2022ஆம் ஆண்டிற்கான **நிர்வாக அறிக்கை** அனைத்துப் பிரிவுகளிடமிருந்து பெற்று நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 1736/2020/சி1) | தீர்மானம் எண்:56.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

***********************